# பட்டினப்பாலையில் தொழில்கள்

**முனைவர் மு. கலாமாரி**
**உதவி பேராசிரியர், தமிழ்த்துறை, (சுயநிதிப்பிரிவு)**
**ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி,**
**குற்றாலம்**

**முன்னுரை**

தொழில் என்பது மனிதனின் வாழ்வாதாரத்திற்கு வருமானம் ஈட்டக்கூடிய செயல். மனிதன் தோன்றியக் காலம் முதல் தனது வாழ்வின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளத் தொழில்கள் செய்யத் தொடங்கினான். முதன் முதலில் வேட்டைத் தொழில் செய்தான். நாகரிகம் தோன்றிய பின்பு வேளாண் தொழில், நெசவுத்தொழில், உழவுத்தொழில், மீன் பிடிக்கும் தொழில், மருத்துவத் தொழில் போன்றப் பலவகைத் தொழில்கள் புரிந்தான். பழங்காலத்தில் பண்டமாற்றுத் தொழில் செய்தான். அத்தொழில் வளர்ச்சியுற்று விற்பனைத் தொழில் புரிந்தான். இவ்வகைத் தொழில்கள் குறித்தச் செய்திகளைப் பட்டினப்பாலை வழியே இவ்வியல் ஆராய்கிறது.

**தொல்காப்பியத்தில் தொழில்**

தமிழில் தோன்றிய முதல் இலக்கண நூல் தொல்காப்பியம். தொல்காப்பியர் தொழிலின் முக்கியத்துவத்தை உணர்த்தியுள்ளார். ஐந்திணைகளுக்குரியக் கருப்பொருள்கள் குறித்துக் குறிப்பிடும்போது தெய்வம், உணவு, மரம், பறவை, இசைக்கருவி, பண்ணோடு சேர்த்துச் செய்தி எனத் தொழிலைச் சுட்டுகிறார். இதனைத்,

**“தெய்வம் உணாவே மாமரம் புட்பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கருவென மொழிப”(தொல்.பொருள்.அகத்., நூ.எ.20)**

எனும் வரிகள் வழியே தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.(இளம்பூரணர்., 2005:16)

**வேளாண்தொழில்**

சோழ நாட்டிலுள்ள காவிரிப்பூம்பட்டினத்தில் வயல்கள் எப்போதும் விளைந்துகொண்டே இருக்கும். இதனைப் பட்டினப் பாலையில்,

**“விளைவு அறா வியன் கழனி” (பட்.பா., வ.8)**

எனும் பாடல்வரி குறிக்கிறது. (சோமசுந்தரனார்., 1909:21) உழவர்கள் இனிமையான குளிர்ச்சி பொருந்திய வாழ்க்கையை வாழ்ந்தனர். வளைந்த ஏர் கொண்டு உழவுத்தொழில் செய்து வாழ்ந்தனர் என்பதனைப் பட்டினப்பாலையின்,

**“புண்ணியம் முட்டாத் தண்ணிழல் வாழ்க்கைக்**
**கொடுமேழி நசை உழவர்” (பட்.பா., வ.ள்:204-205)**

எனும் பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன. (இராசமாணிக்கனார்., 2012:416). சோழ நாட்டிலுள்ள காவிரிப்பூம்பட்டினத்தில் தென்னை, வாழை, பாக்கு, மாமரம், பனைமரம்

போன்றவையும், கிழங்குகள், மஞ்சள், இஞ்சி போன்றப் பொருள்களும் விளை நிலங்களில் வளர்க்கப்பட்டன என்பதனை,

**“கோள் தெங்கின் குலைவாழைக்**
**காய்க் கமுகின் கமழ் மஞ்சள்**
**இனமாவின் இணர்ப் பெண்ணை**
**முதற் சேம்பின் முளை இஞ்சி” (பட்டினப்பாலை, வ.ள்:16-19)**

எனும் பாடல் வரிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. (சோமசுந்தரனார்., 1909:18). காவிரிப்பூம்பட்டினத்தில் பூஞ்சோலைகள் வளர்த்தனர். வருவாய் ஈட்டும்வகையில் தோட்டங்கள் போன்றவை உருவாக்கப்பட்டன. இதனைக்

**“கழிசூழ் படப்பைக் கலியாணர்ப்**
**பொழிற்புறவின் பூந்தண்டலை” (பட்டினப்பாலை, வ.ள்:32-33)**

எனும் பாடல் வரிகள் தொழில்கள் குறித்துச் சுட்டுகின்றது. (ச.வே.சுப்பிரமணியம்., 2014:70)

**கட்டுமானத் தொழில்**

காவிரிப்பூம்பட்டினத்தில் திருக்கோயில் வாயில்களில் பலரும் தொழும் வகையில் வீரர்களுக்குக் கோயில் எழுப்பினர் என்பதனை,

**“மையறு சிறப்பின் தெய்வம் சேர்த்திய**
**மலர் அணி வாயில் பலர் தொழு கொடியும்”(பட்டினப்பாலை,வ.ள்:159-160)**

எனும் வரிகள் மூலம் கட்டுமானத் தொழல் நிலவியதை அறிய முடிகின்றது. (மறைமலையடிகள்., 1997:106). சோழ மன்னன் கரிகாலன் காடுகளை அழித்து நாடாக மாற்றினான். கோயில்கள் பல கட்டி அங்குக் குடிகளை வாழச் செய்தான் என்பதனைக்,

**“காடு கொன்று நாடு ஆக்கி**
**கோயிலொடு குடிநிறீஇ**
**வாயிலொடு புழை அமைத்து**
**ஞாயில் தொறும் புதை நிறீஇ” (பட்டினப்பாலை, வ.ள்:283-286)**

எனும் வரிகள் கட்டுமானத் தொழில்களுக்குச் சான்றாக அமைகிறது. (மறை மலையடிகள்., 1997:63). கரிகாலன் குளங்கள் தோண்டினான். நாடு வளத்தைப் பெருக்கினான் என்பதனைப் பட்டினப்பாலையில்,

**“குளந்தொட்டு வளம் பெருக்கி” (பட்டினப்பாலை, வ:284)**

எனும் வரியானது குளங்களை வடிவமைக்கும் பணிகள் நடைபெற்றது எனக் குறிப்பிடுகின்றது. (மறைமலையடிகள்., 1997:63). காவிரிப்பூம்பட்டினத்தில் பலரும் வந்து தங்கும் வகையில் பொது அம்பலங்கள் அமைக்கப்பட்டன. அவ்வம்பலம் பருத்த நீண்ட தூண்களால் ஆனது. அத்தூண்களில் யானைகள் தன் உடம்பை உரசிச் சாய்ந்து தங்கும்படியாக உறுதியாகக் காணப்படும் தன்மை உடையன. இதனை

**“வம்பலர் சேர்க்கும் கந்துடைப் பொதியில்**
**பருநிலை நெடுந்தூண் ஒல்கத் தீண்டிப்**
**பெருநல் யானையொடு பிடிபுணர்ந்து உறையவும்” (பட்.பா., வ.ள்:249-2151)**

எனும் பாடல் வரிகள் சான்றாக அமைந்து உள்ளன. (சோம்சுந்தரனார்., 1909:57)

**மீன் பிடித்தொழில்**

பரதவர்கள் மீன் பிடிக்கும் தொழில் செய்தனர். வளைந்த படகுகளில் பரதவர்கள் கடலில் சென்று மீன் பிடித்தனர் என்பதனை,

**“நெடுங்கால் மாடத்து ஒள் எரிநோக்கி**
**கொடுந்திமில் பரதவர் குரூஉச்சுடர் எண்ணவும்” (பட்.பா., வ.ள்:111-112)**

எனும் வரிகள் மீன்பிடித்தல் தொழிலைப் பரதவர்கள் செய்தனர் என்று குறிப்பிடுகிறது. (மறைமலையடிகள்., 1997:108). பரதவர்கள் இருக்கும் குடியிருப்புகளின் மேற்பரப்பு மூங்கில் கம்புகளால் வேயப்பட்டிருக்கும். குடிசைகளின் நடுவில் நிலவுகாத்து நிழல் போல வலைகள் உணரும் மணல் முற்றங்கள் அமைந்திருக்கும். இதனை,

**“நெடுந் தாண்டிலில் காழ் சேர்த்திய**
**குறுங் கூரைக் குடி நாப்பண்**
**நிலவு அடைந்த இருள் போல**
**வலை உணங்கும் மணல் முன்றில்” (பட்டினப்பாலை, வ.ள்:80-83)**

எனும் வரிகள் பரதவர் குடிசை அமைப்பைக் குறிப்பிடுகிறது. (மறைமலையடிகள்., 1997:106). கடலிலுள்ள மீன்களைப் பிடித்து உணவாக உட்கொண்டனர். கடலில் கிடைக்கும் இறால் மீனைச் சுட்டுத் தின்றனர். இதனைக்

**“கடல் இறவின் சூடு தின்றும்” (பட்டினப்பாலை, வ:63)**

எனும் பாடல் வரியானது குறிப்பிடுகின்றது. (மறைமலையடிகள்., 1997:107)

**குற்றத் தொழில் புரிதல்**

மனிதர்களுக்குத் துன்பம் விளைவிக்கும் செயல்களான கொலை, களவு போன்றக் குற்றத்தொழில் புரிந்தனர். இதனைக்

**“கொலை கடிந்தும், களவு நீக்கியும்” (பட்டினப்பாலை, வ:199)**

எனும் வரியானது குறிப்பிடுகின்றது. (சோமசுந்தரனார்., 1909:52). எயினர்கள் கொடிய வில்லினை ஏந்தி நெற்கூடுகளில் இருந்த நெல்லைக் கொள்ளையடித்தனர் என்பதற்குப் பட்டினப்பாலையில்,

**“கொடுவில் எயினர் கொள்ளை உண்ட” (பட்டினப்பாலை, வ:266)**

எனும் வரியானது குறிப்பிடுகிறது. (ச.வே.சுப்பிரமணியம்., 2014:89)

**விற்பனைத் தொழில்கள்**

காவிரிப்பூம்பட்டினத்துக் கடற்கரையில் வெள்ளை உப்பை விளைவித்து விலை கூறி விற்றனர். பண்டமாற்று முறையில் நெல்லைப் பெற்றனர். இதனை,

**“வெள்ளை உப்பின் கொள்ளைச் சாற்றி**
**நெல்லொடு வந்த வல்வாய்ப் ப.்.றி” (பட்டினப்பாலை, வ.ள்:29-30)**

எனும் பாடல் வரிகள் விற்பனைத் தொழில் இருந்ததைக் குறிப்பிடுகிறது. (ச.வே.சுப்பிரமணியம்., 2000:152). காவிரிப்பூம்பட்டினத்தில் கள்ளுக்கடைகள் இருந்தன. கள்ளுக்குரிய விலைகள் கொடிகளில் எழுதப்பட்டு இருந்தன என்பதனை,

**“மணற்குவைஇ மலர் சிதறிப்**
**பலர் புகுமனைப் பலிப்புதவின்” (பட்டினப்பாலை, வ.ள்:178-179)**

எனும் வரிகளில் விற்பனைக் குறித்த சான்றுகள் குறிப்பிடப்படுகின்றன. (ச.வே.சுப்பிரமணியம்., 2014:82). காவிரிப்பூம்பட்டினத்து மக்கள் பூக்களை அரிய விலை கொடுத்து வாங்கினர். இதனை,

**“அருவிலை நறும்பூத் தூஉய்த் தெருவில்” (பட்டினப்பாலை, வ.எ்:252)**

எனும் வரியானது பூ விற்கும் தொழில் இருந்ததெனக் குறிப்பிடுகின்றது. (மறைமலையடிகள்., 1997:67)

**மகளிர் தொழில்கள்**

வயலில் அறுவடை செய்த நெல்லை மகளிர் தங்கள் வீட்டு முற்றத்தில் காய வைத்துப் பறவைகள் தின்ன வரும்போது தங்கள் காதணியைக் கழற்றி வீசியெறிந்து விரட்டினர். இதனை,

**“நேரிழை மகளிர் உணங்கு உணாக்கவரும்**
**கோழி எறிந்தக் கொடுங்கால் கனங்குழை” (பட்டினப்பாலை, வ.எ்:22-23)**

எனும் வரிகள் காவல் தொழில் புரிந்தனர் என்றுக் குறிப்பிடுகிறது (ச.வே.சுப்பிரமணியம்., 2014:70). மகளிர் இறைவனை வழிபடும்போது இசைக் கருவிகள் இசைத்தனர் என்பதனைக்

**“குழல் அகவ யாழ் முரல**
**முழவு அதிர முரசு இயம்ப**
**விழவு அறா வியல் ஆவணத்து” (பட்டினப்பாலை, வ.எ்:156-158)**

என்ற வரிகள் குறிப்பிடுகிறது. (ச.வே.சுப்பிரமணியம்., 2014:80)

பகைவர் நாட்டினரை வென்று அவர்தம் மகளிரைச் சிறைபிடித்து வந்தனர். பகைவர் நாட்டுப் பெண்களைக் கொண்டி மகளிர் என்று அழைத்தனர். அம்மகளிர் திருக்கோயில் பணி செய்தனர் என்பதனைப் பட்டினப்பாலையில்,

**“கொண்டி மகளிர் உண்துறை மூழ்கி**
**அந்தி மராட்டிய நந்தா விளக்கின்**
**மலரணி மெழுக்கும் ஏறிப் பலர் தொழ**
**வம்பலர் சேர்க்கும் கந்துடைப் பொதியில்” (பட்.பா., வ.எ்: 246-249)**

எனும் வரிகள் மகளிர் திருக்கோயில் பணி செய்தனர் என்றுக் குறிப்பிடுகிறது. (மறைமலையடிகள்., 1997:66)

**உயர்குடித் தொழில்கள்**

தவம் செய்வோர் தங்குகின்றத் தவப்பள்ளிகள் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்தன. சடையுடைய முனிவர்கள் தீயில் நெய் சொரிந்து வேள்வித் தொழில் புரிந்தனர். இதனைத்

**“தவப்பள்ளித் தாழ்காவின்**
**அவிர்சடை முனிவர் அங்கி வேட்கும்**
**ஆவுதி நறும்புகை முனைஇ” (பட்டினப்பாலை, வ.எ்:53-54)**

எனும் வரிகள் வேள்வித் தொழிலுக்குச் சான்று குறிப்பிடுகிறது. (மறைமலையடிகள்., 1997:104). வேள்வித் தொழில் செய்து அந்தணர்கள் அவி உணவையும், பணியாரம், சமைக்காத அரிசி போன்றவற்றைப் பிறருக்குத் தானமாக வழங்கினர். இதனை,

**“அமரர் பேணியும் ஆவுதி அருந்தியும்**
**பண்ணியம் அட்டியும் பசும்பதம் கொடுத்தும்” (பட்.பா., வ.எ்:200,203)**

எனும் வரிகள் குறிப்பிடுகிறது. (சோமசுந்தரனார்., 1909:54). இல்லற மாண்பில் மிகவும் முக்கியத்துவம் பெற்றது அறம் செய்தலாகும். இதனைப் பட்டினப்பாலைப்

**“புண்ணியம் முட்டாத் தண்ணிழல் வாழ்க்கை” (பட்.பா., வ:204)**

எனும் வரிகள் குறிப்பிடுகிறது. (மறைமலையடிகள்,, 1997:108). பல நூலறிவு பெற்றுக் கேள்விகளால் புகழ்பெற்ற ஆசிரியர்கள் இருந்தனர். இதனைப்

**“பல் கேள்வித் துறைபோகிய**
**தொல்லாணை நல்லாசிரியர்” (பட்டினப்பாலை, வ.ள்: 169-170)**

இவ்வரிகள் ஆசிரியர்கள் இருந்தனர் என்று உறுதிப்படுத்துகிறது. (மறைமலையடிகள்., 1997:106)

### கலைத் தொழில்கள்

கடற்கரையில் மணலில் பரதவர் குடி மக்கள் பாவை செய்து மகிழ்ந்தனர். பாவை செய்வதும் பொதுவாகக் கலைகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது என்று பட்டினப்பாலையில்,

**“பாவை சூழ்ந்தும் பல்பொறி மருண்டும்” (பட்.பா., வ:102)**

எனும் பாடல் வரி குறிப்பிடுகிறது. (இராசமாணிக்கனார்., 2012:418). காவிரிப்பூம்பட்டினத்தில் அறிவு வாய்ந்தக் கூத்தர்கள் முழவுகள் முழங்க இனியப் பாடல்கள் பாடினர். இதனைப் பட்டினப்பாலையில்,

**“முதுவாய்க் கோடியர் முழவொடு புணர்ந்த**
**திரிபுரி நரம்பின் தீந்தொடை ஓர்க்கும்**
**பெருவிழாக் கழிந்த பேஎம் முதிர் மன்றத்து” (பட்.பா., வ.ள்:253-255)**

எனும் வரிகள் பாடல்கள் பாடும் இசை கலைத் தொழில் இருந்ததைக் குறிப்பிடுகிறது. (சோமசுந்தரனார்., 1909:70). எயினர் துடி என்ற இசைக் கருவி முழக்கினர். இசைக் கருவிகள் இசைப்பதும் சிறந்ததொருக் கலையாகக் கருதப்படுகிறது. இதனைத்

**“தொடுதோல் அடியர் துடிபடக் குழீஇ” (பட்டினப்பாலை, வ:265)**

எனும் வரிகள் குறிப்பிடுகிறது. (மறைமலையடிகள்., 1997:67)

### பொற்கொல்லர் தொழில்

பொன்னால் செய்த வளையல்கள் அணிந்து புதல்வர்கள் ஓடி ஆடினர். மெய் முழுவதும் அணிகலன்கள் அணிந்தனர் என்றக் குறிப்புக் காணப்படுகின்றது. இதன் வாயிலாக அணிகலன்கள் செய்யும் தொழில் இருந்தது. இதனைப் பட்டினப்பாலையில்,

**“பொன் தொடிப்புதல்வர் ஓடி ஆடவும்**
**முற்று இழை மகளிர் முகில் முளை திளைப்பவும்”**

(பட்டினப்பாலை, வ.ள்: 295-296) எனும் வரிகள் அணிகலன்கள் செய்யும் தொழில் இருந்ததைக் குறிப்பிடுகிறது. (மறைமலையடிகள்., 1997:67)

### போர்த்தொழில்

சோழ நாட்டு மன்னன் கரிகாலன் பகைவரின் காவல் அரண்களை அழித்தவன். பகைவர் நாட்டுக் கோபுரக் கதவுகளைத் தனது யானைகளைக் கொண்டுத் தகர்த்தான் என்றுப் போர்க் குறித்தச் செய்திக் காணப்படுகின்றது. இதனைப் பட்டினப்பாலையில்,

**“கடியாண் தொலைத்த கதவு கொல் மருப்பின்**
**முடியுடைக் கருந்தலை புரட்டும் முன் தாள்” (பட்.பா., வ.ள்:229-230)**

எனும் வரிகள் குறிப்பிடுகிறது. (இராசமாணிக்கனார்., 2012:218). சோழ நாட்டிலுள்ளக் காவிரிப்பூம்பட்டினத்தில் கதிரவன் கதிர்கள் நுழையாத வண்ணம் அமரர்கள் பாதுகாத்தனர். இதனைப் பட்டினப்பாலையில்,

**"செல்லா நல்லிசை அமரர் காப்பின்" (பட்டினப்பாலை, வ:184)**

எனும் வரிகள் அமரர்கள் பகைவர் நுழையாத அரண்களைப் பாதுகாத்தனர் என்றச் செய்தியைக் குறிப்பிடுகிறது. (சோமசுந்தரனார்., 1909:56)

**கால் நடைகள் வளர்த்தல்**

காவிரிப்பூம்பட்டினத்தில் மக்கள் வீடுகளில் பசு, எருது போன்றக் கால்நடைகளும், பன்றிகள், கோழிகள், ஆட்டுக்கிடாய்கள் போன்ற உயிரினங்களையும் வளர்த்தனர். இவ்வுயிரினங்கள் புறச் சேரியில் அமைந்து உள்ளக் கிணறுகளைச் சுற்றித் திரிந்துக் கொண்டிருந்தன. இதனைப் பட்டினப்பாலையின்

**"பறழ் பன்றிப் பல்கோழி**
**உறைக் கிணற்றுப் புறச்சேரி**
**மேழகத் தகரொடு சிவல் விளையாட" (பட்டினப்பாலை, வ.ள்:74-76)**

எனும் வரிகள் கால்நடைகளை வளர்க்கும் தொழில்கள் இருந்ததைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது. (மறைமலையடிகள்., 1997:105)

**வாணிகத் தொழில்**

வாணிகம் இரண்டு வகைப்படும். அவை, 1. உள்நாட்டு வாணிகம் 2.வெளிநாட்டு வாணிகம் என்பனவாகும். வாணிகத் தொழில் காவிரிப்பூம்பட்டினத்திலுள்ள கடற்கரை ஓர நகரங்களான 1.மருவூர்ப்பாக்கம், 2.பட்டினப்பாக்கத்தில் நடைபெற்றது. இவை இரண்டும் துறைமுக நகரங்களாகும். துறைமுகங்களில் வாணிபப் பொருள்கள் வந்து குவிந்தன. (மயிலை சீனி.வேங்கடசாமி., 1974:78). வாணிகம் கடல் வழியாகத்தான் தோன்றி வளர்ந்தது. பண்டையக் காலத்தில் இருந்து கடல் வழியே தான் வாணிபப் பொருள்கள் கொண்டு செல்லப்பட்டன. இதனை உணர்த்தும்விதத்தில் தொல்காப்பியர் "வங்கத்து வாணிகம்" என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். இதனால் வாணிபம் சிறப்புற்று விளங்கியது. கடல் வழியே நடந்தது என்பதை நூற்பா எண்.149க்குச் சான்று கூறும்போது குறிப்பிடுகிறார். (இளம்பூரணர்., (உ.ஆ)., 2010:191)

**முடிவுரை**

மனிதர்களின் வாழ்வின் தேவைக்குத் தொழில் அவசியமானது என்பதை பட்டினப்பாலையின் வழி அறியமுடிகின்றது. காவிரிப்பூம்பட்டினத்தில் வேளாண் தொழிலை அறியமுடிகின்றது. கொலை, களவு போன்றக் குற்றத் தொழில்களை மக்கள் கைவிட்டனர் என்ற குறிப்பும் அறியப்பட்டுள்ளது. படகுகளில் ஏறிப் பரதவர்கள் மீன் பிடித்தல் தொழில் செய்தனர் என்றும் விற்பனையும் செய்தனர் என்றும், உப்பை விற்றனர் என்றும்; குறிப்பிடப்படுகிறது. கொண்டி மகளிர் திருக்கோயிலில் பணி செய்தனர். வேள்வித் தொழில் புரிவோர் அவி உணவை மக்களுக்குக் கொடுத்தல், அணிகலன்கள் செய்தல் பொற்கொல்லர் தொழில் என அறிய முடிகின்றது.